**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம்,**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**

<u>செய்திக்குறிப்பு</u>

புதுச்சேரி அரசு, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலமாக செயல்படுத்தப்படும் "ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் தோட்டக்கலை விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 2022-23 ஆம் ஆண்டிற்கு உற்பத்திக்குப் பிந்தைய மானியமாக, வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு "சாகுபடிக்குப் பிந்தைய மானியமாக ஒரு சென்ட்டுக்கு ரூ.1500/-ம், ஒரு ஹெக்டேருக்கு ரூ.50,000/- க்கும் மிகாமல்" வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் வகையில் வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விவசாயிகள் இவ்விண்ணப்பங்களை 27.06.2022 முதல் புதுவை தாவரவியல் பூங்காவில் உள்ள கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகத்திலும், அவர்தம் பகுதிக்குட்டபட்ட உழவர் உதவியகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் துறையின் இணையதளத்திலும் (www.agri.py.gov.in) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30.08.2022 தேதிக்குள் அந்தந்த பகுதியில் உள்ள உழவர் உதவியகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**(C.சிவராமன்)**
**கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை)**
**புதுச்சேரி**